# ‘தோட்டியின் மகன்’ நாவலில் தலித் மக்களின் வாழ்வியல் சிக்கல்கள்

*ப.பானுப்பிரியா*
*ஆய்வியல் நிறைஞர்*
*சக்தி மகளிர் கல்லூரி*
*ஒட்டன்சத்திரம்*

**முன்னுரை**

மனித சமூகம் சாதி, மதம், இனம் மொழியால் பிளவுப்பட்டுக் கிடக்கின்றது. நிகழ் உலகத்தில் சக மனிதர்களை நேசித்தல் என்பது இயந்திரத்தனமாக இருக்கிறது. இந்தியா முழுமைக்கும் மதப்பிரச்சினை, சாதிப் பிரச்சினை காலங்காலமாகத் தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது. இது சமூக அடுக்கினுள்ள தலித் மக்களை அடிமைநிலைக்கு ஆட்படுத்துகின்றது.

தாழ்த்தப்பட்ட மக்கள் ஏராளமான துன்பங்களையும், சுமைகளையும் பொறுத்துக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். அவர்களின் வாழ்வாதாரம், பொருளாதாரம், நிலம்மீட்பு, அரசியல் அதிகாரம், சாதியக் கொடுமைகள் எதிர்ப்பு, இரட்டைக்கொலை முறை மீதான தடை வேண்டிப் போராட்டம், பெண்கள் வன்புணர்ச்சிக்குள்ளாக்குதல் போன்ற நிகழ்வுகள் இன்னும் சமூகத்தில் புரையோடிக்கிடக்கின்றன. இந்நிகழ்வுகளை “தந்தை பெரியார் கருத்தியல் தளத்தில் நடத்திய போராட்டம், திராவிட இயக்கத்தின் சாதி எதிர்ப்பு, மூட நம்பிக்கையைச் சாடுதல் சமூக நீதிக்காவும், பொருளாதாரக் கோரிக்கைகளுக்காகவும், பொதுவுடைமை அமைப்புகள் போன்ற இயக்கங்களை நடத்தினார்.” இவ்இயக்கங்கள் தமிழில் தலித் இலக்கியம் தோன்ற வலிமையான பின்புலமாக அமைந்தன. நவீன இலக்கியத்தின் இரு கண்களாக அமைவன பெண்ணியமும், தலித்தியமும் ஆகும். இத்தலித்தியம் முதன் முதலில் மராட்டியத்திலும் பின்னர் கர்நாடகத்திலும், தன் இயக்கத்தை நிறுவிக் கொண்டது. தமிழில் தோன்றிய முதல் தலித் இலக்கியம்; ‘கு.சின்னப்பபாரதியின் ‘தாகம்’ ஆகும். தலித் மக்களின் நிலை சமூகத்தில் எவ்வாறு புரையோடிக்கிடக்கின்றது, அவர்களின் வாழ்வியல் சிக்கல்களை ஆராய்வதே கட்டுரையின் நோக்கமாகும்.

**துப்புரவுத் தொழில்**

துப்புரவுத் தொழில் என்பது சமூகத்தின் கீழ்த் தட்டிலுள்ள மக்கள் செய்யும் பணியாகும். கிராமங்களையும், நகரங்களையும் சுத்தம் செய்தல், சாலைகள், தெருக்களை சுத்தம் செய்தல், கழிவறைகளைச் சுத்தம் செய்தல், சாக்கடை கழிவு, நீர்த்தேக்கங்களை அகற்றுதல் என்பன போன்ற பணிகளைத் துப்புரவுத் தொழிலாளர்கள் செய்கின்றனர். அவர்களைத் ‘தோட்டி’ என்ற சொல்லாலும் அழைப்பர்.

இச்சொல்லாடலை மையமிட்டு மலையாள மொழிபெயர்ப்பு நாவலான ‘தோட்டின் மகன்” நாவலின் துப்பறவுத் தொழிலாளருக்கான வாழ்வியல் சிக்கல் ஆராயப்படுகிறது.

**துப்புரவின் பயன்கள்**

சுற்றுப்புறம் தூய்மையாக இருக்கவும். நிலத்தின் தூய்மை கருதியும், நோய் தொற்று வராமல் இருக்கவும் துப்புரவுத் தொழிலாளர்கள் தங்களுக்கு நோயினை ஏற்படுத்திக் கொண்டு உலகினைச் சுத்தம் செய்யும் தூய்மையானவர்களாக இருக்கின்றனர்.

**தலித்தியம் சொற்பொருள்**

‘தல்’ என்ற வடமொழிச் சொல்லில் இருந்து உருவானதே ‘தலித்’ என்ற சொல். இதன் பொருள் பிரிக்கப்படுதல், கூறுபோடுதல், ஒடுக்கப்படுதல் என்பதாகும். பண்பாட்டுச் சூழலில் பொருளாதாரம், சாதி, சமூகம், சமயம் ஆகியவற்றில் புறக்கணிக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட பஞ்சமர்களைக் குறிக்கின்றது” என்று புகழேந்திக் குறிப்பிடுகின்றார்.

சமூகக் கட்டமைப்பில் அடித்தட்டு நிலையிலுள்ள மக்களாக விவசாயக் கூலிகள், குழந்தைத் தொழிலாளர்கள், வறுமையில் வாடுவோர், வேலையில்லாதோர், கிராம ஊரகவேலை செய்பவர் என எந்த பிரிவினரை எடுத்துக் கொண்டாலும் அதில் குறிப்பிடத்தக்கவர்களாகவும், கணிசமானவர்களாகவும், தலித் மக்களே இடம் பெறுகின்றனர்.

**அதிகாரத்தின் சூழ்ச்சி**

தோட்டிகளை மதிக்காமல் ஒதுக்கி வைத்தாலும் அவர்களிடையே 'ஒற்றுமை' என்னும் ஆயுதம் இருக்கிறது. அதனால் அவர்களைப் பிரிக்க எண்ணிய அதிகாரவர்க்கத்தினர் ஒரு சங்கம் ஆரம்பித்தனர்.

அந்த சங்கம் தோட்டிகளுக்கிடையே நடத்தப்பட்டு நடைமுறைக்கு வர வேண்டும். அச்சங்கத்தில் எடுக்கப்படும் சட்ட திட்டங்கள் அனைத்தும் நமக்கு தெரிய வேண்டும். அது நம் அதிகாரத்திற்குள் வரவேண்டுமென்று திட்டம் தீட்டி சூழ்ச்சி செய்தனர். அவர்களுக்கு என எந்த உரிமையும் இல்லை இது சூழ்ச்சியாக இருந்தது.

**அதிகார வர்க்கத்தின் பெயருக்கான அரசியல்**

"தோட்டிகளும் மனிதர்கள் தான். அவர்களுக்கு ஆசைகள் உண்டு. தன் குழந்தையை மேல் தட்டு மக்களின் குழந்தையைப் போல் வளர்க்க எண்ணினான் சுடலைத் தோட்டி"

அவன் தற்போது தன் மகனுக்கு என்ன பெயரிடலாம் என சிந்தித்தான். பெயர் மட்டும் போதுமா? அழைப்பதற்குச் செல்லப் பெயரும் வேண்டும். பின்னர் சுடலை தன் மகனுக்கு 'மோகன்' என்று பெயர் சூட்டினான். செல்லப் பெயராக 'பேபி' என்ற பெயரை வைத்தான்.

மறுநாள் வக்கீல் வீட்டிற்குத் தொழிலுக்காகச் சென்ற போது வக்கீலின் மனைவி தோட்டி உன் மகன் பெயர் என்ன என்றாள். அதற்கு 'மோகன்' என்றதும், வக்கீல் மனைவி வாய்விட்டுச் சிரித்தாள் 'குப்'பென்று வெளிப்பட்ட சிரிப்பு சுடலைக்கு பைத்தியக்காரப் பட்டத்தைச் சூட்டியதோடு அவனை நையாண்டி செய்வதாகத் தோன்றியது. அம்மாதிரியானப் பெயர் வைக்கத் தோட்டிகளுக்கு உரிமை இல்லை என்பதை அச்சிரிப்பின் தொனி வெளிப்படுத்தியது.

சுடலையின் மனம் கலங்கியது. தோட்டியின் குழந்தைகளையும், தோட்டிகளையும் மேல்தட்டு மக்கள் ஒரு மனித பிறவியாகக் கூட நினைக்கவில்லை. அந்த கேலிச் சிரிப்பை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. வக்கீல் மனைவியைப் போல் முனிசிபல் சேர்மனின் மனைவியும் கேட்டு நையாண்டி செய்தாள். இம்மாதியான மேல்த் தட்டு மக்கள் நையாண்டித்தனம் கீழ்தட்டு மக்களையும் அவர்களின் உணர்வுகளையும் ஆசைகளையும் உடைத்தெறிச் செய்கின்றது. பெயர் என்பது அதிகாரத்திற்கான அடையாள அரசியலாக உணர முடிகின்றது.

**அன்றாட வாழ்வில் ஏற்படும் சிக்கல்கள்**

தலித் மக்கள் அன்றாட வாழ்வில் பல விதமான சிக்கலுக்கு ஆட்பட்டு வாழ்ந்து வருகின்றனர். அன்றாடத் தேவைகளைக் கூட அவர்களால் பூர;த்தி செய்ய முடியவில்லை.

நோய், வறுமை, பணச்சிக்கல், ஊதியத்தின் போதாமை என பல விதமான பிரச்சினைகளை தங்களுடனே சுமக்கின்றனர். அதனை

**இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்**
**இன்மைவே இன்னா தது (குறள் 367)**

என்ற குறள் இன்மையில் தலை சிறந்தது எதுவெனில் வறுமை எனத் திருவள்ளுவர் கூறுகிறார். இளமையில் வறுமை மிகக் கொடுமை என்றார் ஔவையார். கீழ்தட்டு மக்களின் வறுமையைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டனர் அதிகாரவர்க்கத்தினர். அரசியல் வாதிகளாலும், ஆதிக்க வர்க்கத்தினர்களாலும் ஊனமாக்கப்பட்டனர் தலித் மக்கள். அவர்கள் மேல்தட்டினருக்கு சேவகம் செய்தலிலேயே தங்களின் வாழ்நாளைக் கழிக்கின்றனர்.

இச்சூழ்நிலையில் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு வைசூரி என்னும் நோய் ஏற்படுகிறது. முதலில் சுப்பு என்பவன் மனைவியைத் தாக்கியது. அப்போது அவனுக்கு மனைவியைக் காப்பாற்றக்கூடப் பணம் இல்லை அதனால் தன் மனைவியை இழந்தான். அக்குடும்பத்திலுள்ளவர்களும் நோய்க்கு ஆட்பட்டு தெருத்தெருவாக அழைந்தனர். தன் பிள்ளைகளுக்கு உண்ண உணவும், உடுத்த உடையும் இல்லாமல் தவித்தனர். தங்களின் அன்றாடத் தேவைகளுக்கு கூட பணமின்றி தவித்தனர்.

துப்புரவுத் தொழிலாளர்களுக்கு வேறு விதமான தொற்றுநோய்களும் தாக்கினர். அதன் விளைவாகத் தோட்டி இன மக்கள் 40-60 வயதுக்குள்ளேயே தங்கள் வாழ்க்கைப் பயணத்தை முடித்துக் கொண்டனர். அத்தொற்று நோயினைத் தடுப்பதற்கான வழிமுறைகள். தலித் மக்களுக்கென்று செய்யப்படாமையால் தலித் மக்கள் தவித்தனர். சங்கம் வைத்துக்கொள்ள உரிமை இல்லை. அப்படியே சங்கத்தை ஏற்பத்தினாலும் அதனை மேல்தட்டில் இருக்கும் அதிகாரவர்க்கத்தினர் கலைத்தனர். நாவலில் நிரந்தர ஊதியம் இல்லாதவர்களாக தோட்டியினத்தினர் காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றனர். கொடுத்த ஊதியத்திலும் கூட பாதிப்பணத்தினை அதிகாரப் பெரிச்சாலிகளின் ஊழல் செய்யும் நிலை நாவலில் நீரோட்டமாக அமைந்துள்ளது. தலித் மக்கள் அன்றாட வாழ்க்கையிலும் நிம்மதியான வாழ்க்கை வாழவில்லை.

**கல்வியில் தலித் மக்களின் நிலை**

**எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டு**
**கண்ணென்ப வாழும் உயிர்க்கு (குறள் - 392)**

என்ற குறள் மனிதனுக்கு எண்ணும் எழுத்தும் இரண்டு கண்கள் என்கிறார் வள்ளுவர். கல்வி என்பது தோட்டி மக்களுக்கே எட்டாக் கனியாகவே இருந்தது.

“சுடலையின் மகன் மோகன். அவனைப் பள்ளியில் சேர்க்க எண்ணினான். சுடலையை ஆசிரியர் கேட்டார் நீயோ தோட்டியின் மகன் எப்படி மேல்தட்டு மக்களின் குழந்தைகள் படிக்கும் பள்ளியில் படிக்க முடியும் என்றார். தன் குழந்தையை சுடலை மற்றொரு பள்ளிக்கு அழைத்துச் சென்றார். அங்கொரு காரணம் கூறி பள்ளியில் இடமில்லை என்று துரத்தினர். பின்னர் மற்றொரு பள்ளிக்கு தன் மகனை அழைத்து சென்றான். அப்பள்ளியின் இரண்டு நிபந்தனைகளுடன் சேர்த்தனர். அது என்னவென்றால் குழந்தையின் பெற்றோர் பெயருக்கு பதிலாக வேறொருவர் பெயரை போட வேண்டும் என்றனர். ஏனெனில் தோட்டி மக்களுக்கு கல்வி மறுக்கப்பட்டு இருந்ததென்பதை நாவல் வழி அறிய முடிகின்றது.

**முடிவுரை**

சமூக அமைப்பில் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைச் சிக்கல்களைப் பதிவு செய்துள்ளார். காலங்காலமாக தொன்று தொட்டு வந்த தலித் மக்கள் வறுமை, கல்வியின்மை, துப்புறவுப் பணி செய்தல், போன்ற சிக்கல்களினால் தங்கள் உரிமையை இழந்து வந்தனர்.

அதிகாரத்தின் உச்சத்திலிருக்கும் மக்களைப்போல் அல்லாமல் அன்றாட வாழ்வாதாரங்களுக்கே போராடிக் கொண்டிருக்கின்றனர். தங்கள் வாழ்வாதாரத் தேவைகளுக்காகச் சமூக மாற்றத்தை எதிர் நோக்கி காத்திருக்கின்றனர்.